# சென்னையில் இன்றுமுதல் ஆசிய சாம்பியன்ஸ் ஹாக்கி

Hero ASIAN CHAMPIONS TROPHY CHENNAI 2023




போட்டிக்கான இலச்சினை 'பொம்மன்'.

**சென்னை, ஆக. 2:** ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியின் 7-ஆவது எடிஷன், சென்னையில் வியாழக்கிழமை தொடங்கி, வரும் 12-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது. இதன் ஆட்டங்கள், எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தில் விளையாடப்படுகின்றன. இந்தியா முதல் நாளில் சீனாவை சந்திக்கிறது.

போட்டியில் களம் காண சென்னை வந்த இந்தியா (உலக தரவரிசை 4), தென் கொரியா (9), மலேசியா (10), பாகிஸ்தான் (16), ஜப்பான் (19), சீனா (25) அணிகளுக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த அணிகள் கடந்த இரு நாள்களாக பயிற்சியில் ஈடுபட்ட நிலையில், போட்டி வியாழக்கிழமை தொடங்குகிறது.

3 முறை சாம்பியனான இந்திய அணியைப் பொருத்தவரை, ஸ்பெயினில் நடைபெற்ற சர்வதேச ஹாக்கி போட்டியில் சிறப்பாக ஆடி, அடுத்த 3 நாள்களில் அதே உத்வேகத்துடன் இப்போட்டிக்கு வந்துள்ளது. ஆசிய விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் நிலையில் (செப்டம்பர்), தன்னை முழுமையாகத் தயார்படுத்திக் கொள்ளும் ஒரு முன்னோட்டகளமாக இந்தப் போட்டியை இந்தியா எதிர்கொள்கிறது.

2024 பாரீஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெறும் வாய்ப்பை ஆசிய விளையாட்டுப் போட்டிகள் வழங்குவதால் இந்தியா உள்ளிட்ட ஆசிய அணிகளுக்கு அந்தப் போட்டி முக்கியமானதாக இருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே, இந்த ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியில் காயம் உள்ளிட்ட பின்னடைவுகள் ஏற்படாமல் தனக்கான உத்திகளை வகுக்க வேண்டிய கட்டாயம் இந்தியாவுக்குள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு 5 வாரங்களே உள்ள நிலையில், அதற்கு நெருக்கமாக இந்த ஆசிய சாம்பியன்ஷிப் போட்டியை நடத்துவதற்கு பங்கேற்பு நாடுகள் அதிருப்தி தெரிவித்துள்ளன. என்றாலும், அத்தகைய பிரதான போட்டிக்கு முன்பாக இதுபோன்ற போட்டி அவசியம் என்றும், அதுவும் இந்தியாவில் நடப்பது சாதகமானது என்றும் இந்திய அணியின் பயிற்சியாளர் கிரெய்க் ஃபுல்டன் கூறியிருக்கிறார்.

## முதலில் சீனாவை சந்திக்கிறது இந்தியா



**இன்றைய ஆட்டங்கள்**

தென் கொரியா – ஜப்பான்
(மாலை 4 மணி)

மலேசியா – பாகிஸ்தான்
(மாலை 6.15 மணி)

இந்தியா – சீனா
(இரவு 8.30 மணி)

நேரலை: ஸ்டார் ஸ்போர்ட்ஸ், ஃபேன் கோட்

### இதுவரை...

| ஆண்டு | இடம் | சாம்பியன் | ரன்னர்-அப் | மூன்றாமிடம் |
|---|---|---|---|---|
| 2011 | சீனா | இந்தியா | பாகிஸ்தான் | மலேசியா |
| 2012 | கத்தார் | பாகிஸ்தான் | இந்தியா | மலேசியா |
| 2013 | ஜப்பான் | பாகிஸ்தான் | ஜப்பான் | மலேசியா |
| 2016 | மலேசியா | இந்தியா | பாகிஸ்தான் | மலேசியா |
| 2018 | ஓமன் | இந்தியா/பாகிஸ்தான்* | – | மலேசியா |
| 2021 | வங்கதேசம் | தென் கொரியா | ஜப்பான் | இந்தியா |

* தொடர் மழை காரணமாக இந்தியா, பாகிஸ்தான் அணிகள் இணை சாம்பியனாக அறிவிப்பு

2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற இந்திய அணி, அதன் பிறகு நடப்பாண்டு தொடக்கத்தில் எஃப்ஐஹெச் புரோ லீக் ஹாக்கி, அடுத்து உலகக் கோப்பை ஹாக்கி ஆகியவற்றில் பெரிதாக சோபிக்கவில்லை. எனினும், அதன் பிறகான 16 ஆட்டங்களில் இந்தியா, 9 வெற்றி, 5 தோல்வி, 2 டிராக்களை பதிவு செய்து முனைப்புடன் உள்ளது.

அணிக்கான பின்னடைவாகத் தெரிவது, பெனால்ட்டி கார்னர் வாய்ப்புகளை கோலாக மாற்றுவதுதான். ஹர்மன்பிரீத், வருண் குமார், அமித் ரோஹிதாஸ், ஜக்ராஜ் சிங் போன்ற திறமையான டிராக்ஃப்ளிக்கர்கள் இருந்தும், அந்த வாய்ப்புகளில் இந்தியா தடுமாறுகிறது.

அதில் அணியை மேம்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருவதாக பயிற்சியாளர் கிரெய்க் தெரிவித்துள்ளார்.

இந்தியா தனது முதல் ஆட்டத்தில் சந்திக்கும் சீனா, நடப்பாண்டில் பங்கேற்கும் முதல் போட்டி இதுவாகும். போட்டியில், எல்லா அணிகளும் ஒரே குரூப்பாக இருக்க, ரவுண்ட் ராபின் ஆட்டங்களின் முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும்.

### மைதானம்...

சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் மைதானத்தில் முக்கியத்துவமிக்க பிரதான போட்டி நடைபெறுவது, கடந்த 2007-க்குப் பிறகு இதுவே முதல் முறையாகும். இதற்கு முன் ஹாக்கி சாம்பியன்ஸ் கோப்பை போட்டி (1996, 2005), ஆசிய கோப்பை ஹாக்கி (2007) ஆகிய போட்டிகள் நடைபெற்றுள்ளன.

கடந்த 1995-ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த மைதானத்தில் உள்ள இருக்கைகளின் எண்ணிக்கை 8,670.

இந்த ஆசிய சாம்பியன்ஸ் ஹாக்கி போட்டிக்காகவே, ஹாக்கி மைதானத்தில் சர்வதேச தரத்திலான செயற்கையிழை ஆடுகளம் (டர்ஃப்) புதிதாக நிறுவப்பட்டுள்ளது.

உலகிலேயே முதல் முறையாக 'ஜீரோ கார்பன்' முறையில் பசுமை ஆற்றல் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த டர்ஃபின் 80 சதவீத மூலப்பொருள் கரும்புச்சக்கையாகும். வழக்கமாக பயன்படுத்தப்படும் 'ஆஸ்ட்ரோ டர்ஃப்'களில் ஆட்டத்துக்காக 15,000 முதல் 20,000 லிட்டர் தண்ணீர் நிரப்ப வேண்டிய நிலையில், இந்த டர்ஃபில் அதைவிட 30 சதவீதம் குறைவாக நிரப்பினாலேயே போதுமானது.

### தமிழகத்துக்கு பெருமை...

சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை தமிழகத்தில் நடத்துவதற்கு மாநில அரசு தொடர்ந்து முனைப்பு காட்டி வருகிறது. அந்த வகையில் செஸ் ஒலிம்பியாட் போட்டி கடந்த ஆண்டு ஏறத்தாழ இதே ஜூலை – ஆகஸ்ட் காலகட்டத்தில் மாமல்லபுரத்தில் நடத்தி, இந்தியாவில் முதல் முறையாக அந்தப் போட்டியை ஒருங்கிணைத்த பெருமையை தமிழகம் பெற்றது.

தற்போது, அதேபோல் ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியையும் இந்தியாவில் முதல் முறையாக நடத்தும் பெருமையையும் தமிழகமே பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

### டிக்கெட் விற்பனை...

ஆசிய சாம்பியன்ஸ் கோப்பை ஹாக்கி போட்டியின் ஆட்டங்களை நேரில் காண, "ticketgenie.in' என்ற வலைதளத்தில் டிக்கெட்டுகளை வாங்கலாம். ரூ.300, ரூ.400, ரூ.500 என்ற விலைகளில் டிக்கெட்டுகள் உள்ளன.

ஒரு நாளுக்காக வாங்கும் டிக்கெட் கொண்டு, அதே நாளில் நடைபெறும் 3 ஆட்டங்களையும் கண்டு களிக்கலாம்.

# என்எல்சி விவகாரம்: ஏக்கருக்கு ரூ.40,000 இழப்பீடு

## உயர்நீதிமன்றம் உத்தரவு

**சென்னை, ஆக. 2:** என்எல்சி நிர்வாகத்தால், விளைநிலங்களில் சேதப்படுத்தப்பட்ட பயிர்களுக்காக, ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் இழப்பீட்டுத் தொகையாக நிர்ணயித்த சென்னை உயர்நீதிமன்றம், இந்தத் தொகையை வரும் ஆக. 6-ஆம் தேதிக்குள் வழங்க தமிழக அரசுக்கு உத்தரவிட்டது.

நெய்வேலி என்எல்சி இந்தியா நிர்வாகம் இரண்டாம் சுரங்க விரிவாக்கப் பணிக்காக கரிவெட்டி, மேல்வளையமாதேவி, கீழ் வளையமாதேவி, ஆதனூர் உள்ளிட்ட கிராமங்களில் கையகப்படுத்திய இடங்களில் வாய்க்கால் வெட்டும் பணியின்போது பயிர்கள் சேதப்படுத்தப்பட்டது. அதற்கு எதிர்ப்பு வலுத்த நிலையில், சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் அறுவடை செய்யப்படும் வரை விவசாயிகளுக்கு இடையூறு ஏற்படுத்தக் கூடாது என உத்தரவிடக் கோரி பாதிக்கப்பட்ட விவசாயி முருகன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், அறுவடைக்கு பின் நிலத்தை ஒப்படைத்து விடுவீர்களா என மனுதாரர் தரப்புக்கும், கையகப்படுத்திய பின் நிலத்தில் சாகுபடி செய்ய ஏன் அனுமதித்தீர்கள் என என்எல்சி தரப்புக்கும் கேள்வி எழுப்பியிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி எஸ்.எம். சுப்பிரமணியம் முன் புதன்கிழமை மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது இருதரப்பிலும் உத்தரவாத மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அப்போது என்எல்சி தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன் கூறியதாவது:

தற்போது கால்வாய் தோண்டப்படும் நிலம், சுரங்கத்துக்கு மிக அருகில் அமைந்துள்ளது. இந்த நிலம் மிக முக்கியமான பகுதி. மழைக்காலத்தில், சுரங்கத்துக்குள் தண்ணீர் தேங்குவதைத் தடுக்க வேண்டும். அதற்காக பரவனாறை திசை மாற்றி அனுப்புவதற்காக கால்வாய் தோண்டப்படுகிறது. இந்த திட்டத்துக்காக கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு ஏற்கெனவே இழப்பீடு வழங்கப்பட்டுவிட்டது. சேதப்படுத்தப்பட்ட பகுதியை, தவிர்த்து எஞ்சிய மற்ற பகுதிகளில் பயிர்கள் அறுவடை செய்யும் வரை எந்த இடையூறும் கொடுக்கமாட்டோம். அதேநேரம், சம்பந்தப்பட்ட நிலங்களை செப். 15-ஆம் தேதிக்குள் என்எல்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டும்.



**53 காசோலைகள் ஒப்படைப்பு:** கால்வாய் வெட்டும் பணிக்காக சேதப்படுத்தப்பட்ட பயிர்களுக்காக, ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரை வழங்கப்படும். இந்த தொகை ஏற்கெனவே தமிழக அரசுக்கு டெபாசிட் செய்யப்பட்டுவிட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் 88 பேர் உள்ளனர். அவர்களுக்கான 53 காசோலைகள் மாவட்ட நிர்வாகத்திடம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது அவை சிறப்பு தாசில்தார் வசம் உள்ளது என தெரிவித்தார்.

அப்போது தமிழக அரசுத் தரப்பில், இழப்பீட்டுத் தொகையை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து மனுதாரர் தரப்பில், 'ஏற்கெனவே கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு இழப்பீடாக நிர்ணயிக்கப்பட்ட ரூ.25 லட்சம் முழுமையாக வழங்கப்படவில்லை. மேலும், தற்போது இழப்பீடாக வழங்கப்படும் ரூ.30 ஆயிரம் என்பது மிகவும் குறைவானது. ஒரு ஏக்கருக்கு 60 மூட்டை நெல் விளையும். குறைந்தபட்சம் ரூ.1,350 என்று நிர்ணயித்தால் கூட, ஒரு ஏக்கருக்கு ரூ.83 ஆயிரம் வரும். அதன்படி, ரூ. 83 ஆயிரம் இல்லையென்றால்கூட, ரூ.50 ஆயிரமாவது இழப்பீடாக வழங்க உத்தரவிட வேண்டும்' என வாதிடப்பட்டது.

**பாதுகாக்க தவறியது தவறு:** இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதி பிறப்பித்த உத்தரவில், நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்ட சூழலில் அந்த நிலத்தின் முன்னாள் உரிமையாளர்களான விவசாயிகளுக்கு அந்த நிலத்தில் எந்த உரிமையும் இல்லை. இருப்பினும், அந்த நிலத்தில் அவர்கள் விவசாயப் பணிகளை மேற்கொண்டது ஒரு அத்துமீறிய செயல். அதேபோல், கையகப்படுத்திய நிலத்தை பாதுகாக்க தவறியது என்எல்சி நிர்வாகத்தின் தவறு.

எனவே, இந்த விவகாரத்தில் இருதரப்பினரும் தவறு செய்துள்ளதால், ஏக்கருக்கு ரூ.40 ஆயிரம் இழப்பீட்டுத் தொகையாக நிர்ணயிக்கப்படுகிறது. இந்த இழப்பீட்டுத் தொகையை வரும் ஆக.6-ஆம் தேதிக்குள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார்.

**விவசாய பணிகள் கூடாது:** மேலும், செப்டம்பர் 15-ஆம் தேதிக்கு பின்னர் அந்த நிலத்தில் விவசாயப் பணிகள் எதுவும் மேற்கொள்ளக் கூடாது. கையகப்படுத்தப்பட்ட நிலத்தை என்எல்சி பாதுகாக்க வேண்டும். நிலத்தின் முன்னாள் உரிமையாளர்கள் சட்டம் - ஒழுங்கு பிரச்னை ஏற்படுத்தினால் அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கலாம் என உத்தரவிட்டு, விசாரணையை ஆகஸ்ட் 7-ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

# தொழில்முனைவோர் ஏன் தேவை?



முனைவர் பன்னீர்செல்வம்

**உலகின் பிரசித்திபெற்ற பெரும் நிறுவனங்களின் தலைமைப் பொறுப்புகளில் இந்திய இளைஞர்கள்தான் உள்ளனர். அவர்கள், அதைப் போன்ற பெரும் நிறுவனங்களை இந்தியாவில் அமைக்க எண்ணுவதில்லை; அதில் நாட்டம் காட்டுவதும் இல்லை.**

கட்டுரையாளர்:
பொருளாதார நிபுணர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# மாசில்லா சுற்றுச்சூழல் படைப்போம்

பேரா.தி.ஜெயராஜசேகர்

ஒவ்வோர் ஆண்டும் உலக அளவில் சுமார் 70,000 டன் தீங்கு விளைவிக்கும் ரசாயனங்கள் காரணமாக நீர்நிலைகளைப் பாதிக்கின்றன என்று 'நேச்சர்' இதழில் வெளியான பூச்சிக்கொல்லி பயன்பாடு பற்றிய ஆய்வறிக்கை கூறுகிறது. பூச்சிக்கொல்லிகளில் இருந்து வரும் தீங்கு விளைவிக்கும் ரசாயனங்கள் விவசாய மண் மற்றும் அந்த நிலத்தை சுற்றியுள்ள தண்ணீரை மாசுபடுத்துவது மட்டுமன்றி, நீர்வாழ் சுற்றுச்சூழல் அமைப்புகளையும், மனித ஆரோக்கியத்தையும், நன்னீர் ஆதாரங்களையும், கடல் நீரையும் மாசடையச் செய்கின்றன.

1962-ஆம் ஆண்டு ரேச்சல் கார்சன் எழுதி வெளியான 'சைலண்ட் ஸ்பிரிங்' (மௌன வசந்தம்) என்ற புத்தகம் பூச்சிக்கொல்லிகளின் கண்மூடித்தனமான பயன்பாட்டினால் ஏற்படும் சுற்றுச்சூழல் தீங்குகளை இவ்வுலகுக்கு எடுத்துரைத்தது. இப்புத்தகம் வெளியான பின்புதான் சுற்றுச்சூழல் மற்றும் அதன் பாதுகாப்பு பற்றிய அவசியத்தை மனித சமூகம் உணரத் தொடங்கியது.

உலகில் முதல் முறையாக அமெரிக்கா 1970-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையத்தை நிறுவி, மாசைக் கட்டுப்படுத்தும் சட்டத்தை இயற்றியது. 1972-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் குறித்த முதல் மாநாட்டை ஸ்டாக்ஹோமில் ஐ.நா. சபை நடத்தியது. உலகின் பல நாடுகளில் சுற்றுச்சூழல் அமைச்சகங்கள் உருவாக்கிய ஸ்டாக்ஹோம் மாநாடு இந்தியாவில் 1985-ஆம் வருடம் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் உருவாகக் காரணமாக அமைந்தது.

இந்தியாவில் 1974-ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'தண்ணீர் சட்டம்', 1976- ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மத்திய மற்றும் செயல்படுத்தப்பட்டது. நம் நாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக இயற்றப்பட்ட முதல் சட்டமான இந்த தண்ணீர் சட்டத்துக்கு பின்னர், 1981-ஆம் ஆண்டு காற்று சட்டம் உருவாக்கப்பட்டது. 1984-ஆம் வருடம் டிசம்பர் மாதம் போபாலில் நிகழ்ந்த உலகின் மிக மோசமான தொழில்துறை விபத்து 1986-ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் உருவாகக் காரணமாக அமைந்தது.

சுற்றுச்சூழல்பாதுகாப்புச்சட்டம்இயற்றப்பட்டு 37 ஆண்டுகள் ஆன நிலையில், சட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அமைப்பு நம்மிடம் இல்லை என்றும், தொழில்துறை மற்றும் தொழில் கூட்டாண்மை (கார்ப்பரேட்) குழுக்களின் அரசியல் ரீதியான செயல்பாடுகளே இதற்குக் காரணம் என்றும் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

47 சதவீத இந்திய மக்கள் இன்னும் காற்றின் தர கண்காணிப்பு வலையமைப்புக்கு வெளியே வாழ்கின்றனர் என்றும், 62 சதவீகத்தினர் தங்கள் பகுதி காற்றின் தரம் குறித்த எச்சரிக்கைகள் குறித்து தெரியாமல் இருக்கின்றனர் என்றும் தரவுகள் கூறுகின்றன.

2022- இல் நச்சுத்தன்மை வாய்ந்த காற்று மாசுபடுத்தி துகள்மப் பொருளின் (பார்ட்டிகுலேட் மேட்டர் பி.எம்.2.5) தாக்கம் இந்திய நகர்ப்புறங்களைப் போலவே கிராமப்புறத்திலும் மோசமாக இருந்தது என்று தரவுகள் கூறுகின்றன. தில்லியை மையமாகக் கொண்டு செயல்படும் சுற்றுச்சூழலுக்கான அறிவியல் மையம் நடத்திய ஆய்வு நச்சு மாசுபாடு காரணமாக நகர்ப்புற மக்களைவிட கிராமப்புற மக்கள் தங்கள் ஆயுள்காலத்தை இழக்கின்றனர் என்று கூறுகிறது.

காற்று மாசின் காரணமாக இந்திய கிராமத்தை இழக்கிறார்கள் என்றும், இந்திய நகரவாசிகள் 53 மாத ஆயுள்காலத்தை இழக்கிறார்கள் என்றும் சுற்றுச்சூழலுக்கான அறிவியல் மையம் கூறுகிறது. உத்தரபிரதேச மாநில கிராமவாசிகள் 8 ஆண்டுகளுக்கும் மேலாக வாழ்நாள் இழப்பை எதிர்கொள்வதும், பிகார் மற்றும் ஹரியாணா மாநிலங்களின் கிராமவாசிகள் 7 ஆண்டுகள் வாழ்நாளை இழப்பதும் கண்டறியப்பட்டுள்ளது

தில்லி இந்திய தொழில்நுட்பக் கழக விஞ்ஞானிகளால் உருவாக்கப்பட்ட செயற்கைக்கோள் அடிப்படையிலான தரவுகளைக் கொண்டு காலநிலை போக்கு (கிளைமேட் ட்ரெண்ட்) என்ற நிறுவனம் மேற்கொண்ட பகுப்பாய்வு அடிப்படையில் 2022- ஆம் ஆண்டில் துகள்மப் பொருள் 2.5-இன் சராசரி அளவு கிராமப்புற இந்தியாவில் 46.4 மைக்ரோகிராம்களாகவும், நகர்ப்புறத்தில் 46.8 மைக்ரோகிராம்களாகவும் இருந்தன.

உலக சுகாதார நிறுவனத்தின்படி, 5 மைக்ரோகிராம்கள் என்று இருக்க வேண்டிய இந்தக் காற்று மாசடைந்து நுரையீரலுக்குள் ஊடுருவி, உயிருக்கு ஆபத்தான நோய்களை ஏற்படுத்த காரணமாக அமைகிறது.

2017 -முதல் இந்திய கிராம மற்றும் நகர்ப்புறங்களில் காற்றில் துகள்மப்பொருள் 2.5-இன் மாசு செறிவு கிட்டத்தட்ட ஒரே மாதிரியாக இருந்த சூழலில் 2019-ஆம் ஆண்டு இந்திய அரசால் சுத்தமான காற்றுக்கான தேசிய திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி 2024-ஆம் ஆண்டுக்குள் துகள்மப்பொருள் 2.5 மற்றும் துகள்மப்பொருள் 10 ஆகிய காற்று மாசுபடுத்திகளின் செறிவு 20 முதல் 30 சதவீதம் குறைக்கப்பட வேண்டும் என்ற தேசிய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

திட்டத்தின் கீழ் இதுவரை 131 இந்திய நகரங்களுக்கு 9,000 கோடி ரூபாயை செலவழித்த நிலையிலும், காற்றில் உள்ள மாசு இந்தியாவில் தொடர்ந்து அதிகமாக உள்ளது என்று ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. இன்னும் பெரும்பாலான கிராமப்புறங்களில் காற்றில் மாசினை அளவிட கருவிகள் கூட இல்லை.

தில்லி (87.7 மைக்ரோகிராம்கள்), பிகார் (74.5 மைக்ரோகிராம்கள்), ஹரியாணா (67.8 மைக்ரோகிராம்கள்), உத்தர பிரதேசம் (62.3 மைக்ரோகிராம்கள்), ராஜஸ்தான் (60.4 மைக்ரோகிராம்கள்) மற்றும் மேற்கு வங்கம் (58.3 மைக்ரோகிராம்கள்) போன்ற மாநிலங்களின் கிராமப்புறங்களில் துகள்மப்பொருள் 2.5-இன் செறிவு காற்றில் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கிராமப்புறமாசை சமாளிக்க எதுவும் செய்யப்படாத நிலையில் நகர்ப்புற காற்று மாசை எதிர்த்துப் போராடுவதற்கான மத்திய அரசின் முதலீடு பலனளிக்காமல் உள்ளது என்பது நிபுணர்களின் கருத்து. மாசு அளவைக் கண்காணித்து அதற்கேற்ப ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் பலனளிக்கும் வகையில் கொள்கைகளை உருவாக்குவது அவசியம்.

காற்று மாசைக் கண்காணிக்க புத்திசாலித்தனமான உயர் செயல்திறன் கொண்ட காற்று விரிவாக்க முறையில் இயற்பியல் கொள்கையின் கீழ் செயல்படும் ஏர்ஷேட் முறையை செயல்படுத்தலாம் என்கின்றனர் வல்லுநர்கள். மக்கள்தொகை அடர்த்தி காரணமாக காற்று மாசைக் கட்டுப்படுத்துவதற்காக இந்திய நகரங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது என்றாலும், இந்திய கிராமப்புறங்களுக்கான காற்று மாசு கொள்கை மற்றும் அதைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உருவாக்குவதற்கான சரியான

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# புவிசார் பெருமை!

திருவண்ணாமலை செய்யாறு ஜடேரி நாமக்கட்டி, கன்னியாகுமரி மட்டி வாழைப்பழம், திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர் செடிபுட்டா சேலை ஆகிய மூன்று பொருள்களுக்கு புவிசார் குறியீடு அளிக்கப்பட்டிருப்பதன் மூலம் தமிழகத்துக்குப் பெருமை கிட்டியது மட்டுமன்றி, அந்தப் பொருள்கள் சார்ந்த தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மேம்படவும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

மத்திய வர்த்தக, தொழில் துறையின் கீழ் உள்ள தொழில் ஊக்குவிப்பு மற்றும் உள்நாட்டு வர்த்தகத் துறை, புவிசார் குறியீட்டு பொருள்கள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 1999-இன் படி இந்தப் புவிசார் குறியீடு அந்தஸ்தை வழங்குகிறது. 2003, செப்டம்பர் முதல் இந்தச் சட்டம் அமலுக்கு வந்தது. 2004-ஆம் ஆண்டுமுதல் புவிசார் குறியீடு வழங்கப்பட்டு வரும் நிலையில், அந்தப் பட்டியலில் இடம்பெற்ற முதல் பொருள் என்கிற பெருமையை டார்ஜீலிங் தேயிலை பெற்றது.

கைவினைப் பொருள்கள், உணவுப் பொருள்கள், வேளாண் உற்பத்திப் பொருள்கள் போன்றவற்றுக்கு புவிசார் குறியீடு வழங்கப்படுகிறது. தமிழகத்தைச் சேர்ந்த தஞ்சாவூர் வீணை, கலைத்தட்டு, ஓவியம், திண்டுக்கல் பூட்டு, கண்டாங்கி சேலை, ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா உள்ளிட்ட 55 பொருள்களுக்கு ஏற்கெனவே புவிசார் குறியீடு கிடைத்துள்ள நிலையில், இப்போது அந்த எண்ணிக்கை 58-ஆக அதிகரித்துள்ளது. மேலும், புவிசார் குறியீடு பட்டியலில் அதிக எண்ணிக்கையில் இடம்பெற்ற மாநிலங்கள் பட்டியலில் தமிழகமே முதலிடம் பெற்றிருக்கிறது.

குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த பொருள்களை மூன்றாம் தரப்பினர் தரமின்றி தயாரித்து அதே ஊர்ப் பெயருடன் விற்பனை செய்வதை இந்தக் குறியீடு அந்தஸ்து தடுக்கிறது. இதன்மூலம் அந்தப் பொருள்களை அசலாக தயாரிப்பவர்களுக்கு இழப்பு ஏற்படுவது தடுக்கப்படுவதுடன், பாரம்பரியமான அந்தப் பொருள்களுக்கு சட்டப் பாதுகாப்பும் கிடைக்கிறது.

தற்போது புவிசார் குறியீடு அளிக்கப்பட்டுள்ள செய்யாறு ஜடேரி கிராமத்தின் நாமக்கட்டிக்கு 300 ஆண்டு கால வரலாறு உள்ளது. இந்தக் கிராமத்தில் வசிக்கும் 150 குடும்பங்களில் 90 சதவீத குடும்பத்தினர் விவசாயத்துடன், நாமக்கட்டி தயாரிக்கும் தொழிலையும் செய்து வருகின்றனர்.

நாமக்கட்டி தயாரிக்கத் தேவைப்படும் வெள்ளைப் பாறைகள், அருகில் உள்ள தென்பூண்டிப்பட்டு கிராமத்தில் கிடைக்கிறது. இந்தப் பாறைகளை சிறு துண்டுகளாக உடைத்து, அவற்றை அரைவை இயந்திரங்களில் மாடுகளைப் பூட்டி ஓட்டி அரைக்கின்றனர். பின்னர், தண்ணீரில் பல மணி நேரம் ஊற வைக்கின்றனர். தேங்கி இருக்கும் நீரை வெளியேற்றிவிட்டு அடியில் படிந்துள்ள மிருதுவான வெள்ளை மண்ணை எடுத்து ஈரப்பதத்துடன் மண் உருண்டைகளாக உருட்டி வைக்கின்றனர்.

மண் உருண்டைகள் லேசான ஈரப்பதத்தில் இருக்கும்போது, சிறு சிறு உருண்டைகளாக உருட்டி, அவற்றைத் தட்டி நாமக்கட்டி களாக வெயிலில் காய வைக்கின்றனர். நாமக்கட்டிகள் காய்ந்த பிறகு அவற்றை வைணவ திருத்தலங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கின்றனர். நாட்டு மருந்து தயாரிப்புக்கும் இந்த ஜடேரி நாமக் கட்டிகள் பயன்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தின் பெருமைகளில் ஒன்றாகக் கருதப் படுகிறது, மஞ்சள் கலந்த பச்சை நிறத்துடன் காணப்படும் மட்டி வாழைப்பழம். இதில் உள்ள பொட்டாஷியம் இதய நலனையும், ரத்த அழுத்தத்தையும் பராமரிக்க உதவுவது இதன் மருத்துவச் சிறப்புத் தன்மையாகும். சளித்தொல்லை பயமின்றி குழந்தைகளுக்கும் இந்த வாழைப்பழத்தை கொடுக்கலாம்.

திருநெல்வேலி மாவட்டம் வீரவநல்லூர், வெள்ளங்குளி, புதுக் குடி ஆகிய பகுதிகளில் செடிபுட்டா சேலை தயார் செய்யப்பட்டு வரு கிறது. ஒரு செடியில் பூக்களும், இலைகளும் இருப்பது போல் புட்டா போட்டு நெய்யப்படுவதால் இந்தக் கைத்தறிச் சேலை 'செடிபுட்டா' என்ற பெயர் பெற்றது. பட்டு மற்றும் பருத்தி கலவை நூலில் இந்தச் சேலை தயார் செய்யப்பட்டு வருகிறது. குஜராத்தில் இருந்து தென் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் குடியேறிய சௌராஷ்டிர சமூகத் தினர்தான் இந்தச் சேலையை முதன்முதலில் உருவாக்கினர்.

செடிபுட்டா சேலையை கைத்தறி நெசவில் நெய்வதற்கு ஒன்றரை நாள் ஆகும். அதற்கு கூலியாக ரூ. 400 வரை நெசவாளர் களுக்கு கிடைக்கிறது. இந்தச் சேலைகள் தமிழக அரசின் கோ ஆப் டெக்ஸ் நிறுவனத்துக்கும், தனியார் உற்பத்தியாளர்கள் மூலம் இந்தியாவில் கேரளம் உள்பட பல்வேறு மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

பாரம்பரிய பொருள்களுக்கு எப்போதும் மதிப்பு இருக்கிறது. ஆனால், அந்தப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம்தான் எப்போதுமே கேள்விக்குறியாகத் திகழ்கிறது. கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் செடிபுட்டா சேலை ரகத்துக்கு தமிழக அரசால் மானியம் வழங்கப்படுகிறது. இதேபோல, இதுவரை புவிசார் குறியீடு கிடைத்துள்ள அனைத்துப் பொருள்களின் உற்பத் தியை மேம்படுத்த அத்தொழிலாளர்களுக்கு மத்திய, மாநில அரசுகள் போதிய ஆதரவை அளிக்க வேண்டும்.

தமிழகத்தில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருள்கள் கண்காட்சியை மாவட்டந்தோறும் நடத்துவதைப் போல, புவிசார் குறியீட்டுப் பட்டியலில் இடம்பெற்றுள்ள அனைத்துப் பொருள்களின் விற்பனைக் கண்காட்சியையும் மாவட்டந்தோறும் நடத்துவதற்கு தமிழக அரசு முன்வர வேண்டும். அதன்மூலம் அந்தப் பொருள்கள் சார்ந்த தொழிலாளர்களுக்கு நேரடி யாகப் பலன் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

பாரம்பரியத்துக்கும், நாகரிகத்துக்கும் பெயர் பெற்ற தமிழகத்தின் பெருமைக்கு பெருமை சேர்க்க இதுபோன்று மேலும் பல பொருள் களுக்கு புவிசார் குறியீடு கிடைக்கும் நடவடிக்கையை தமிழக அரசு விரைவுபடுத்த வேண்டும்.

# இணையவழி விளையாட்டுகளுக்கு 28% ஜிஎஸ்டி அக்.1 முதல் அமல்

**புது தில்லி, ஆக.2:** இணையவழி விளையாட்டுகள் மற்றும் சூதாட்ட விடுதிகளில் (கேசினோ) கட்டப்படும் முழு பந்தய தொகை மீதுதான் 28 சதவீத ஜிஎஸ்டி விதிக்கப்படும் என்றும் இது அக்டோபர் 1 முதல் அமல்படுத்தப்படும் என்றும் புதன்கிழமை கூடிய 51-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதாக மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

காணொலி வழியாக புதன்கிழமை நடைபெற்ற 51-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்துக்கு பிறகு தில்லியில் அமைச்சர் நிர்மலா சீதாராமன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

இணையவழி விளையாட்டுகளில் கட்டப்படும் பந்தய தொகை மீது ஜிஎஸ்டி விதிக்க தில்லி நிதியமைச்சர் கூட்டத்தில் எதிர்ப்புத் தெரிவித்தார்.

அதேவேளையில், சூதாட்ட விடுதிகளில் இருந்து வருவாய் ஈட்டும் கோவா மற்றும் சிக்கிம் மாநிலங்கள், பந்தய தொகையின் முழு முக மதிப்பின் மீது ஜிஎஸ்டி விதிப்பதற்குப் பதில், மொத்த விளையாட்டு வருவாய் அல்லது விளையாட்டில் பங்கேற்பதற்கான கட்டணம் மீது ஜிஎஸ்டி விதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டன.

எனினும், பந்தய தொகையின் முழு முக மதிப்பின் மீது 28 சதவீதம் ஜிஎஸ்டி விதிக்க கடந்த ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவையே விரைந்து அமல்படுத்த வேண்டும் என்று கர்நாடகம், குஜராத், மகாராஷ்டிரம், உத்தர பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்கள் தெரிவித்தன.

இதுதொடர்பாக நடப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடரில் மத்திய சரக்கு மற்றும் சேவை வரிச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

அந்தச் சட்டத்திருத்தங்களை மாநில பேரவைகளில் நிறைவேற்றப்பட்டு அக்டோபர் 1 முதல் அமலுக்கு வரும்.

இணையவழி விளையாட்டுகள் மற்றும் சூதாட்ட விடுகள் மீதான வரி விதிப்பு குறித்த விதிமுறைகளில் ஏதேனும் மாற்றம் தேவையா என்பதை அறிய, 6 மாதங்களுக்குப் பிறகு அல்லது அடுத்த ஆண்டு ஏப்ரலில் மறுஆய்வு மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

## மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்



ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் புதன்கிழமை பங்கேற்ற மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன்.

## தமிழகத்தின் கருத்துகளை ஏற்க கவுன்சில் ஒப்புதல்



**சென்னை, ஆக. 2:** பணம் வைத்து ஆடப்படும் இணையவழி விளையாட்டுகள் தொடர்பான வரைவு சட்டத் திருத்தம் மேற்கொள்ளப்படும் போது, தமிழகம் தெரிவித்த கருத்துகள் ஏற்கப்படும் என ஜிஎஸ்டி கவுன்சில் உறுதியளித்ததாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

51-ஆவது ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் காணாலி வழியாக தமிழக அரசின் சார்பில் நிதி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கலந்து கொண்டார்.

இதுகுறித்து, தமிழக அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'ஆன்லைன் விளையாட்டு, பணம் வைத்து ஆடப்படும் சூதாட்டங்கள், குதிரைப் பந்தயம் ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் ஜி.எஸ்.டி., வரி விதிப்பில் திருத்தம் கொண்டு வருவதற்கான வரைவுத் திட்டம் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. அப்போது, தமிழகத்தில் பணம் வைத்து விளையாடப்படும் விளையாட்டுகளுக்கும்,

சூதாட்டங்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், அது தண்டனைக்குரிய குற்றமாகும் என்பதை எடுத்துரைத்த நிதியமைச்சர் தங்கம் தென்னரசு, கவுன்சிலில் கொண்டு வரப்படும் திருத்தங்கள், மாநிலத்தின் சட்டங்களுக்கு உட்பட்டு ஒத்திருக்கும் வகையில் அமைந்திட வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

அமைச்சர் தங்கம் தென்னரசு முன்வைத்த யோசனைகளை ஏற்று உரிய திருத்தங்களைச் செய்வதாக ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

EVA STALIN IAS ACADEMY